# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 28 திங்கட்கிழமை 10.02.2025 கதிர் 123







## இன்று முதல் நாளாந்த மின்வெட்டு அமுல்

கொழும்பு, பெப். 10

இன்றும் நாளையும் நாளொன்றில் தலா ஒன்றரை மணிநேரம் சுழற்சி முறையில் மின் விநியோகத் தடையை அமுல்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது. இன்று நடைபெற்ற விசேட கலந்துரையா டலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. இது தொடர்பான யோசனை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நேற்று நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட திடீர் மின்தடையையடுத்து, நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களும் செயலிழந்துள்ளன.

குறித்த இயந்திரங்களை மீண்டும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பதற்குச் சுமார் 4 நாட்களாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த இயந்திரங்களின் செயலிழப்பினால் தேசிய மின் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சமநிலை யற்ற தன்மையை முகாமை செய்து, மின்சக்தி யைப் பங்கீடு செய்யும் நோக்கில் மின்வெட்டை அமுல்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பிற்பகல் 3.30 முதல் இரவு 9.30 வரையான காலப்பகுதியில் இந்தச் சுழற்சி முறையிலான மின் விநியோகத் தடை 7 ➤



# தையிட்டி விகாரையை உடைக்க வேண்டும்!



## போராட்டத்துக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி முழு ஆதரவு என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்

வவுனியா, பெப். 10

யாழ். தையிட்டி விகாரை உடைக்கப்பட வேண்டும் என்றும், அதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டத்துக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி முழுமையான ஆதரவு வழங்கும் என்றும் அந்தக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். 7 ➤

## தையிட்டி திஸ்ஸ விகாரையை தமிழர்கள் இடிக்க இடமளியோம்

### இப்படி சூளுரைக்கின்றார் கம்மன்பில

கொழும்பு, பெப். 10

யாழ். தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ ராஜமகா விகாரையில் தமிழர்கள் எவரும் கை வைக்க இடமளிக்கமாட்டோம் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், “யாழ்ப்பாணம் - தையிட்டியில் 7 ➤





## பஸ் விபத்தில் நால்வர் பலி! 28 பேர் வைத்தியசாலையில்!!

கொழும்பு, பெப். 10

குருணாகல், தோரயாய பகுதியில் இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் உயிரிழந்ததுடன் 28 பேர் காயமடைந்துள்ளனர். 7 ➤

## மாகாண சபை முறைமையில் அநுர அரசு கைவைக்காதாம்

### உறுதியளிக்கின்றார் அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், பெப். 10

“மாகாண சபை முறைமை என்பது தாம் வென்றெடுத்த உரிமை என்று தமிழர்கள் கருதுவதால் அந்த உரிமையில் தேசிய மக்கள் சக்தி அரசு கை வைக்காது. இவ்வருட 7 ➤



## தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு பிறகே உள்ளூராட்சி தேர்தல்?




கொழும்பு, பெப். 10

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் நடந்துவதற்கு அரசு திட்டமிட்டிருந் தாலும், அதற்கான சத்தியங்கள் இல்லை என்று அரசியல் வட்டாரங்களில் 7 ➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# தையிட்டி விகாரையை அகற்ற முடியாது



கொழும்பு , பெப். 10

தையிட்டியில் அமைந்துள்ள விகாரையை அந்த இடத்தில் இருந்து அகற்ற முடியாது என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனெவி தெரிவித்துள்ளார்.

அத்துடன், தையிட்டி விகாரை எந்தக் காணியில் அமைக்கப்பட்டுள்ளதோ அந்தக் காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணி வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு மேலும் அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்," நாட்டில் அமைந்துள்ள எந்த மதத் தலங்களையும் அகற்ற முடியாது. அது மத ரீதியான, இன ரீதியான வன முறைகளுக்கே வழிவகுக்கும்.

மதத்தலங்களை வைத்துக்கொண்டு அரசியல் செய்வதை கட்சிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் ஏற்கனவே நேரில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அவர்கள் இணக்கமான தீர்வுக்கு வர சம்மதம் தெரிவித்துள்ளார்கள். பலர் மாற்றுக் காணிக்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில், காணி உரிமையாளர்களைத் திசை திருப்பி அவர்களைத் தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குப் பயன்படுத்தச் சிலர் முற்படுகின்றனர்." என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



## விலைகள் வீழ்ச்சியால் சிரமத்தில் உற்பத்தியாளர்கள்

கொழும்பு , பெப். 10

கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதால் உற்பத்தியாளர்கள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக அகில இலங்கை கோழிப்பண்ணை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட இலங்கை கோழிப்பண்ணை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் மாதலி ஜெயசேகர இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கால்நடை தீவனமாக மக்காச்சோளத்தை மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அகில இலங்கை கோழிப்பண்ணை வியாபாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## சிகிரியாவிற்கு கிடைத்துள்ள அங்கீகாரம்

கொழும்பு , பெப். 10

2025 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் வரவேற்கத்தக்க நகரங்களின் பட்டியலை Booking.com என்ற வலைத்தளம் வெளியிட்டுள்ளது.

குறித்த வலைத்தளமானது 360 மில்லியனுக்கும் அதிகமான சரிபார்க்கப்பட்ட வாடிக்கையாளர் மதிப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு, 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் வரவேற்கத்தக்க நகரமாக இலங்கையின் சிகிரியாவை முடிசூட்டியுள்ளது.

பதின்மூன்றாவது டிராவலர் ரிவியூ விருதுகளின் (Traveller Review Awards) ஒரு பகுதியாக, Booking.com உலகின் மிகவும் வரவேற்கத்தக்க 10 நகரங்களை வெளியிட்டுள்ளது.

அதன்படி, சிகிரியா பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. ஸ்பெயினில் உள்ள கசோர்லா மற்றும் பிரேசிலில் உள்ள உருபிசி ஆகியவை பிற இடங்களுடன் சேர்த்து தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் நியூசிலாந்திலுள்ள டௌபோ, அமெரிக்காவிலுள்ள சென். அகஸ்டின், இத்தாலியிலுள்ள ஓர்வியேட்டோ, கொலம்பியாவிலுள்ள மணிசாலேஸ் மற்றும் ஜேர்மனியிலுள்ள குவெட்லின்பர்க், தாய்லாந்திலுள்ள கோ லந்தா, பிரித்தானியாவிலுள்ள செஸ்டர் ஆகிய நகரங்கள் இவ்வாறு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

Booking.com, இலங்கையின் சிகிரியா பற்றி கூறுகையில் "இலங்கையின் 'கலாசார முக்கோணத்தின்' மையத்தில் அமைந்துள்ள சிகிரியா, இயற்கை அழகையும் ஆழமான வரலாற்றையும்கொண்டுள்ள ஒரு இடமாகும்.

யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னமான சிகிரியா பண்டைய இலங்கையின் கட்டடக்கலை சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

மேலும், சிகிரியா சாகசம் மற்றும் அமைதியின் மறக்க முடியாத கலவையை வழங்குகிறது" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# இரண்டு தீ பரவல்: பல கோடிகள் கருகின



கொழும்பு , பெப். 10

முல்லேரியா மற்றும் தெமட்டகொட பகுதிகளில் இரண்டு தீ விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அங்கொட சந்தியில் மூடப்பட்ட வாகன உதிரி பாகங்கள் பழுதுபார்க்கும் கடையில் ஏற்பட்ட தீ, கட்டிடத்திற்கு அருகிலுள்ள இரண்டு மாடி வீட்டிற்கும் பரவியதாக முல்லேரியா பொலிஸ் தெரிவித்துள்ளது.

கோட்டே மாநகர சபையிலிருந்து மூன்று தீயணைப்பு வாகனங்களும், இலங்கை விமானப்படையிலிருந்து ஒரு தீயணைப்பு வாகனமும் வந்து தீயைக் கட்டுப்படுத்தி அருகிலுள்ள கடைகளுக்குப்பரவாமல்தடுத்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த தீ விபத்தில் வாகன உதிரி பாகங்கள் பழுதுபார்க்கும் கடை மற்றும் உரிமையாளர் வசிக்கும் இரண்டு மாடி வீடு, மேல் மற்றும் கீழ் தளங்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த கார் உதிரி பாகங்கள் முற்றிலுமாக எரிந்து நாசமானதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இரண்டு மாடி வீட்டின் மேல் தளத்தில் வசித்து வந்த கேரேஜின் உரிமையாளரின் தாயார், தீ விபத்து ஏற்பட்டதை அடுத்து, உள்ளூர்வாசிகள் மற்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டார்.

தீயணைப்பு வாகனங்கள், முல்லேரியாவ பொலிஸ் அதிகாரிகள், களனி முல்ல இராணுவ முகாமின் அதிகாரிகள் மற்றும் உள்ளூர்வாசிகள் தீயை அணைக்க கடுமையாக உழைத்தனர்(ஐ)

# லசந்த விசாரணை சுருக்கத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவும்



கொழும்பு , பெப். 10

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பில் விசாரணைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு விசாரணை சுருக்கமொன்றை நீதி அமைச்சர் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை சட்டத்துறை மீது அழுத்தங்களை பிரயோகிப்பதையும் அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொலன்னறுவையில் ஞாயிற்றுக்கிழமை கிராமத்துக்கு கிராமம் வேலைத்திட்டத்தை ஆரம்பித்த போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, தமக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கிய மக்களுக்கு இந்த அரசாங்கம் அநீதியிழைத்துள்ளது.

தாம் கூறிய அனைத்தும் பொய் என்பதை அரசாங்கமே ஒத்துக் கொண்டதைப் போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. பழைமை முறையிலேயே இந்த அரசாங்கத்தின் ஆட்சியும் தொடர்கின்றது.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பில் நீதி அமைச்சர் பாராளுமன்றத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த வழக்கு தொடர்பில் எத்தனை சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், விசாரணைகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறித்த சுருக்கமொன்றை விசாரணைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும்.

அதேவேளை, அரசாங்கமானது நீதித்துறை, சட்டமா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றை சவாலுக்கு உட்படுத்தும் செயற்பாடுகளையும் நிறுத்த வேண்டும். நீதி அமைச்சர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய சிரேஷ்ட அதிகாரியும் சட்டத்தரணியுமாவார்.

அவர் அரசியல் பயணத்தை நிறைவு செய்யும் போது மீண்டும் தொழில் நிமித்தம் நீதிமன்றம் செல்ல வேண்டியேற்படும்.

எனவே, முன்னர் தான் பணியாற்றிய சட்டமா அதிபர் திணைக்களத்தை சவாலுக்குட்படுத்துவதை நீதி அமைச்சர் தவிர்த்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கின்றோம்.

கிரிஷ் நிறுவனத்துக்கும் எனக்கும் நகர் போட்டிக' காக அனுசரணை பெற்றுக் கொண்டமை தொடர்பிலேயே தொடர்பிருக்கிறது.

அது சட்ட ரீதியான கொடுக்கல் வாங்கலாகும். எவ்வாறிருப்பினும் அதனை அரசியல் பழிவாங்கலுக்காக இந்த அரசாங்கம் பயன்படுத்துகிறது என்றார். (ஐ)

# 8 மில்லியன் ரூபாய் நிதி மோசடி செய்த நால்வர் கைது

கொழும்பு , பெப். 10

அரியகுளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கடத்தி, 8 மில்லியன் ரூபாய் நிதி மோசடி செய்த வழக்கில், ஒரு பெண் உட்பட நான்கு சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, குறித்த இளைஞன் வேலைக்காக ஐரோப்பா செல்ல திட்டமிட்டிருந்தான்,

மேலும் ஒரு பெண் அவனை அணுகி, ரூ.8 மில்லியன் கொடுத்தால் இரண்டு வாரங்களுக்குள் அவனை அழைத்துச் செல்வதாக உறுதியளித்துள்ளார்.

சில நாட்களுக்குப் பிறகு, அந்தப் பெண், மேலும் மூன்று பேருடன் சேர்ந்து, ஒரு வாகனத்தில் அந்த இளைஞரின் வீட்டிற்கு வந்து, அவரைக் கடத்திச் சென்று, அவரது வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை தனது வங்கிக் கணக்கிற்கு மாற்றியுள்ளார்.

பின்னர் சந்தேக நபர்கள் பாதிக்கப்பட்டவரை கோப்பாயில் உள்ள ஒரு வெறிச்சோடிய பகுதியில் கைவிட்டுச் சென்றனர்.

விசாரணையைத்தொடர்ந்து, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் குற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது (ஐ)

# புதிய விமானப்படைத் தளபதி ஸ்ரீதலதா மாளிகைக்கு விஜயம்





கொழும்பு , பெப். 10

விமானப்படையின் புதிய தளபதியாக பதவியேற்ற பிறகு, எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்க அவர்கள் கடந்த 08 பிப்ரவரி 2025 அன்று கண்டியில் உள்ள புனித ஸ்ரீ தலதா மாளிகைக்கு வழிபாடுகளை மேற்கொண்டு ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார் .

புதிய விமானப்படைத் தளபதி முதலில் ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்று புனித தாது சின்னத்தை வணங்கி ஆசிகளைப் பெற்ற பின்னர் அவர் மல்வத்த மகாவிஹாரைக்கு சென்று வணக்கத்திற்குரிய திப்படுவாவா ஸ்ரீசித்தார்த்த சுமங்கலாபிதான மகாநாயக்க தேரரை சந்தித்து ஆசிகளைப் பெற்றார். அதன் பின்னர், விமா னப்படைத் தளபதி அவர்கள் அஸ்கிரி மகா விஹாரைக்குச் சென்று, அஸ்கிரி மகா விஹாரைப் பிரிவின் மகாநாயக்கரான வணக்கத்திற்குரிய வாரகாகொட தம்மசித்தி ஸ்ரீ பங்கநாநந்த ஞானரதன மகாநாயக்க தேரரை சந்தித்து அவரது ஆசீர்வாதங்களைப் பெற்றார்.

விமானப்படை சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி கிருஷாந்தி எதிரிசிங்க உட்பட விமானப்படை குழுவினர் குழு இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

# ஜனாதிபதி ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பயணம்



கொழும்பு , பெப். 10

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயிட் அல் நஹியனின் அழைப்பையேற்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இன்று ஐக்கிய அரபு இராச்சியத்திற்குப் புறப்படுச் சென்றார்.

இந்த சுற்றுப்பயணத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க டுபாயில் நடைபெறும் 2025 உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டிலும் உரை நிகழ்த்தவுள்ளார்.

எதிர்கால நோக்கிலான பிரவேசங்கள், தொழில்நுட்ப புத்தாக்கம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தும் கருத்தாடலை ஏற்படுத்த உலகத் தலைவர்களை ஒரே மேடையில் அமர்த்துவதே உலகத் தலைவர்கள் மாநாட்டில் முக்கிய நோக்கமாகும். இந்த மாநாட்டில் மனித சமூகம் தற்காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், எதிர்கால முன்னேற்றங்கள், புதிய வாய்ப்புகள் தொடர்பில் நாடுகளுக்கிடையில் கருத்து பரிமாறிக்கொள்ளப்படவுள்ளது. இதில் 150 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி 4000 ற்கும் அதிகமானவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

உலகத் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவிருக்கும் பல நாட்டுத் தலைவர்கள் மற்றும் அரசாங்க பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயிட் அல் நஹியன் ஆகியோருக்கு இடையிலான இருதரப்பு சந்திப்பும் இதன்போது நடைபெறவுள்ளதுடன், அதனூடாக இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு துறை சார்ந்த ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்ளவும் இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இந்த மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, ஐக்கிய அரபு இராச்சியத்தின் உப ஜனாதிபதி மற்றும் பிரதமர் செயிக் மொஹமட் பின் ரஷீட் அல் மக்டூமையும் சந்திக்கவுள்ளார்.

இலங்கைக்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, வலுசக்தி, சுற்றுலா, நிதி மற்றும் ஊடகத் துறைகளில் முன்னணியில் உள்ள உலக நிறுவனங்களின் நிறைவேற்று அதிகாரிகள் பலருடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கலந்துரையாடவுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி ஆகியோரும் இந் விஜயத்தில் இணைந்துள்ளனர். (ஐ)

# தையிட்டி போராட்டத்துக்கு ஈ.பி.டி.பி. கட்சியும் ஆதரவு

தையிட்டி விகாரை தொடர்பில் காணி உரிமையாளர்களினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள அமைதி வழிப் போராட்டத்துக்கு ஆதரவை வழங்குவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவரால் வெளி யிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

“தையிட்டிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ ராஜமகா விகாரை என்பது சட்ட ரீதியான அனுமதிகள் எவையும் பெற்றுக் கொள்ளப்படாமல், எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த தனியார் காணிகளில் அமைக் கப்பட்டுள்ளது.

இதனால் பூர்வீக நிலங்களை இழந்துள்ள மக்கள் தங்களுடைய காணிகளை மீட்பதற்குத் தொடர் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பை நிறைவற்றுவதற்கான முயற்சிகள் எம்மால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எந்தவொரு விடயத்தையும் நடைமுறைச் சாத்தியமான வழியில் அணுகுகின்றவர்கள் என்ற அடிப்படை யில், குறித்த விகாரை அமைந்துள்ள பகுதியை அளவீடு செய்து, முதற்கட்டமாக, அப்போது விகாரைக் கட்டுமானங்கள் அமைந்திருந்த சிறு பகுதியைத் தவிர ஏனைய பகுதிகளை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னடுத்திருந்தோம்.

அதற்கு, பாதுகாப்பு அமைச்சு, படைத் தரப்பு மற்றும் சம்மந்தப்பட்ட விகாராதிபதி போன்றோர் சம்மதமும் தெரிவித்திருந்தனர்.

எனினும், அளவீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு சில தரப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், அளவீட்டுப் பணிகள் பல தடவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அக்காலப் பகுதியில் தேர்தல் அறிவிப்புக்கள் வெளியாகி, ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்றமையால், துரதிஷ்டவசமாக எம்மால் அந்தப் பணிகளை நிறைவேற்ற முடிய வில்லை.

எனினும், மக்களுடைய காணிகள் மக்களுக்கே சொந்தம் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

திஸ்ஸ ராஜமகா விகாரை அமைந்துள்ள பகுதி மாத்திரமன்றி, வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், பாதுகாப்பு தரப்பு போன்றவற்றினால் கையகப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும் என்பதே எமது திடமான நிலைப்பாடாக இருக கின்றது. அந்த அடிப்படையில், காணி உரிமையாளர்களினால் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள அமைதி வழிப் போராட்டத்துக்குப் பூரண ஆதரவை வழங்கவுள்ளோம்.” - என்றுள்ளது.

# பொலிஸ் பதவிகளில் இடமாற்றம்



கொழும்பு , பெப். 10

குற்றப் புலனாய்வு பிரிவு (CID) மற்றும் நிதி குற்றப் புலனாய்வு பிரிவு

ஆகியவற்றுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அசங்க கரவிட்டவின் இடமாற்றத் திற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் நிதி குற்றப்புலனாய்வு பிரிவுக்கு பொறுப்பதிகாரியாக பிரதி பொலிஸ்மா அதிபர் எம்.டி.பி. தயாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதிக் குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்காக அடுத்த வாரம் நிதி குற்றப் புலனாய்வு பிரிவு ஸ்தாபிக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, மேல் மாகாண போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பி.லியனகே உடன் அமுலுக்கு வரும் வகையில் மேல் (வடக்கு) மாகாணத்தை மேற்பார்வையிடுவதற்கான பிரதி பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை. செனவிரத்ன இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய இரு மாவட்டங்களையும் மேற்பார்வையிடும் விசேட கடமைகளையும் ஏற்றுக் கொள்வார். 12.02.2025 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மேற்படி உயர் பதவிகளில் உள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

# அகமதாபாத் சர்வதேச விமான நிலையத்தில் வெடிகுண்டு மிரட்டல்-குஜராத்தில் பரபரப்பு!






அகமதாபாத் சர்வதேச விமான நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட வெடிகுண்டு மிரட்டல் கடிதத்தால் குஜராத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது .

அண்மைக் காலங்களாக விமானங்கள், பாடசாலைக்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் வருவது தொடர்கதையாகி உள்ளது. சில நாட்கள் முன் சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு வந்த பயணிகள் விமானத்துக்கு போலி வெடிகுண்டு மிரட்டல் வந்திருந்தது.

இந்நிலையில் குஜராத்தில் உள்ள அகமதாபாத் சர்தார் படேல் சர்வதேச விமான நிலையத்தில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும்விதமாக கடிதம் ஒன்று விமான நிலைய வளாகத்தில் கிடந்துள்ளது.

பெயர் எழுதப்படாத அந்த கடித்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பு சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே டெல்லியில் உள்ள செயிண்ட் ஸ்டீபன் கல்லூரி மற்றும் சில தனியார் பாடசாலைகளுக்கும் போலி வெடிகுண்டு மிரட்டல் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## டொலருக்கு நிகரான இந்திய ரூபாய் பெறுமதி வரலாறு காணாத வீழ்ச்சி!



அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாய் மதிப்பு இன்று வரலாறு காணாத வீழ்ச்சியை சந்தித்துள்ளது.


கடந்த வெள்ளிக்கிழமை சந்தை முடிவில் டொலரின்மதிப்பு 87.43 ரூபாயாக இருந்த நிலையில் இன்று திங்கள்கிழமை சந்தை தொடக்கத்தில் 43 சதவீதம் வீழ்ச்சி அடைந்து ரூபாய் மதிப்பு 87.92 ரூபாயாக உள்ளது.

நேற்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், எஃகு மற்றும் அலுமினியம் இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் 25ழூ வரியை அறிவித்தார்.

இதன்காரணமாக ரூபாய் மதிப்பு சரிவைக் கண்டுள்ளது. அனைத்து நாடுகளிலிருந்தும் உலோக இறக்குமதிகளுக்கு இந்த வரிகள் பொருந்தும் என்றும் இந்த வார இறுதியில் இது குறித்து அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வரும் என டிரம்ப் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே மந்தமான இந்திய பொருளாதாரத்தை வலுப்படுத்த 5 ஆண்டுகளுக்கு பின்னர் ரெப்போ வட்டி விகிதங்களை 25 அடிப்படை புள்ளிகள் குறைத்து 6.25ழூ ஆக ரிசர்வ் வங்கி அறிவித்திருக்கிறது.

## மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்– பிரதமர் மோடி தெரிவிப்பு !



மாணவர்கள் அழுத்தத்தை பற்றி கவலைப்படாமல் படிப்பில் கவனம் செலுத்தவேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி டெல்லியில் உள்ள பாடசாலை மாணவர்களுடன் இன்று கலந்துரையாடினார்.

பொதுத் தேர்வை அச்சமின்றி எதிர்கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். திணை மற்றும் காய்கறிகளின் முக்கியத்துவம் குறித்தும் உரையாற்றினார். மாணவர்கள் மத்தியில் பிரதமர் மோடி பேசியதாவது:-

நோய் இல்லாததால் நாம் ஆரோக்கியமாக இருக்கிறோம் என்று அர்த்தமல்ல. தூக்கமும், ஊட்டச்சத்தையும் சார்ந்தது. மருத்துவ அறிவியலும் தூக்கத்தில் கவனம் செலுத்துகிறது. அனைவரும் காலை வெயிலில் தங்களது நேரத்தை செலவிட வேண்டும்.

உங்களுக்கு அழுத்தம் இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி கவலைப்படாமல் படிப்பில் கவனம் செலுத்துங்கள். தேர்வு பயத்தை எதிர்கொள்ள வேண்டாம். மேலும் நீங்கள் உங்களை சவால் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

உங்கள் நேரத்தை கட்டுப்படுத்துங்கள். உங்கள் வாழ்க்கையை கட்டுப்படுத்துங்கள். நிகழ்காலத்தில் வாழுங்கள், நேர்மறைகளை கண்டறியுங்கள். உங்களை நீங்களே சவால் செய்வது எப்படி என்பதை அறிய உங்கள் மனதை ஒருமுகப்படுத்த வேண்டும். எப்போதும் முந்தைய முடிவுகளை விட சிறப்பாக செய்ய முயற்சிக்க வேண்டும். அதிக மதிப்பெண்கள் பெறாவிட்டால் வாழ்க்கை வீணாகி விடும் என்று மாணவர்கள் கருதக்கூடாது. பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அடுத்தவர்களுடன் ஒப்பிடக்கூடாது. அதற்கு பதிலாக அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். மாணவர்களை அடைத்து வைக்கக்கூடாது. அவர்களின் ஆர்வத்தை ஆராய சுதந்திரம் வழங்க வேண்டும்.

தலைவர்களின் நடத்தையில் இருந்து மக்கள் குறிப்புகளை பெறுகிறார்கள். பேச்சுக்கள் மட்டுமே உதவாது. இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

## மகா கும்பமேளா திரிவேணி சங்கமத்தில் புனித நீராடிய திரவுபதி முர்மு!



உத்தரப் பிரதேசத்தின் பிரயாக்ராஜில் உள்ள திரிவேணி சங்கமத்தில் மகா கும்பமேளா மிகவும் கோலாகலமாக நடந்து வருகிறது. கடந்த மாதம் 13-ஆம் திகதி தொடங்கிய இந்த நிகழ்வில் இதுவரை 40 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் புனித நீராடி உள்ளனர்.

உலகின் மிகப்பெரிய இந்த கலாசார, ஆன்மிக நிகழ்வில் ஜனாதிபதி திரவுபதி முர்மு இன்று பங்கேற்கிறார். இதற்காக பிரயாக்ராஜ் சென்ற ஜனாதிபதி அங்குள்ள திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார்.

இத்துடன் பல்வேறு சிறப்பு வழிபாடுகளையும் அவர் மேற்கொள்வார் என ஜனாதிபதி மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

முன்னதாக பிரதமர் மோடி கடந்த வாரம் மகா கும்பமேளாவில் புனித நீராடியது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கடந்த மாதம் 29 மவுனி அமாவாசையை முன்னிட்டு அதிக பக்தர்கள் கலந்து கொண்ட போது கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் 30 பேர் உயிரிழந்ததாக அம்மாநில அரசு தெரிவித்தது. 60 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

# நாற்பதுகளை நலமாகக் கடக்கலாம்!



❝நாற்பது வயதில் குழந்தைகள் வளர்ந்து வருவார்கள். அப்போது தமக்கு வயதாவதை உள்ளம் உடனே ஏற்றுக் கொள்ளாது. முன் நெற்றியில் நரை முடிகள் வரும். நெற்றியில் கோடுகள் விழும். கண்ணோரங்களில் சுருக்கங்கள் தோன்றும். ஆனால், அவற்றை மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கும்❞

ஒரு நாளை காலை, மதியம், மாலை, இரவு என்று நான்கு வேளைகளாகப் பிரிப்பது போல் மனித வாழ்க்கையை நான்காகப் பிரித்தால் முதல் இருபது வருடங்கள் காலை, அடுத்த இருபது வருடங்கள் மதியம், நாற்பது வயதில் இருந்து அறுபது வயது வரை மாலை, அதன்பின் எண்பது வயது வரை இரவு என்று கொள்ளலாம்.

இதில் காலையும் மதியமும் பலவிதக் கடமைகளில் கழிந்து விடுகிறது. கல்வி, வேலை, கல்யாணம் என்று மூச்சு விடாமல் இருந்து திரும்பிப் பார்த்தால் மாலைப் பொழுது வந்து விடுகிறது. அதுதான் நாற்பது வயது. அது கூடவே ஒருவிதமான அலுப்பையும் சலிப்பையும் கூட்டி வருகிறது.

பெண்களுக்கு இளமை என்பது கடுமையாக இருக்கும் பருவம் இந்த நாற்பது ப்ளஸ்கள். அதன்பின் முதுமை வருவது அவரவர் மனநிலையைப் பொறு-த்துதான். பொதுவாக இருபதுகளில் திருமணமான ஒரு பெண் ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்று வளர்த்து, அவர்களும் வளரிளம் பருவத்தில் நுழைந்து



சிறகுகள் முளைத்துப் பறக்கத் தொடங்கிய பிறகு ஒரு தனிமையை உணரும் பருவம் அது.

**பெண்களின் ஏழு பருவங்கள்,**

பேதை- 1 வயது முதல் 8 வயது வரை
பெதும்பை - 9 வயது முதல் 10 வயது வரை
மங்கை - 11 வயது முதல் 14 வயது வரை
மடந்தை - 15 வயது முதல் 18 வயது வரை
அரிவை - 19 வயது முதல் 24 வயது வரை
தெரிவை- 25 வயது முதல் 29 வயது வரை
பேரிளம் பெண்- 30 வயதுக்கு மேல் என பிரிக்கப் படுகிறது.

அந்தப் பேரிளம் பெண்களின் மனநிலை எப்படி இருக்கும் என்று ஆண்கள் ஏன் யோசிப்பதில்லை?

திருமணம் முடித்து, விருப்பமோ இல்லையோ கணவருடன் நேரம் கழித்து, பிள்ளைகள் பெற்று, அவர்களுடன் பொழுதைப் போக்கி, அவர்களுக்குப் பாடம், பண்பு, நல்லது கெட்டது எல்லாம் சொல்லிக் கொடுத்து, மூச்சு விட்டு நிமிர்ந்து பார்த்தால் வருடங்களோடு இளமையும் விடைபெறத் தொடங்கியி-ருக்கும். அந்தி சாயத் தொடங்கியிருக்கும்.

அதன்பின் திரும்பிப் பார்த்தால் அவளுக்கென்று, அவளுடன் யாருமேயில்லை என்பது தனிமையின் பொட்டல் வெளியில் நின்றிருக்கும் போதுதான் புத்தியில் உறைக்கும். இதில் பெரும்பாலான பெண்கள் இனி என்ன செய்வது என்றறியாமல் கையறு நிலையில் இருப்பார்கள்.

குழந்தைகளின் திருமணம், அவர்களின் குழந்தைகளை வளர்ப்பது என்று அந்தக் கண்ணி அறுபடாமல் தொடரும். இதுதான் ஒரு பெண்ணின் வாழ்வு பூரணத்துவம் பெறும் நிலை என்ற பிதற்றல்கள் எல்லாம் பாராட்டுகள் என்ற பெயரில் மூளையில் திணிக்கப்பட்டு மயக்கம் தரும். தெய்வ நிலைக்கு உயர்த்தி நம்மையே பலிகடாவாக்குவது புரியாமல் நாமும் வாகாய்த் தலையைக் காட்டிக் கொண்டு நிற்போம்.

நாற்பதுகளில் தான் ஒரு பெண்ணின் உடலும் உணர்வுகளும் தேவைகளும் உச்சத்திற்குச் செல்கின்றன. அவளது இளமை விடைபெ-றப் போகிறது என்பதைவிட முதுமை அழை-



யா விருந்தாளியாக வரப் போகிறது என்பதை அவளால் ஏற்றுக் கொள்ள முடியாது. போதாக்குறைக்கு உடல் உபாதைகளும் அவளைப் படுத்தி எடுக்கும். அது புரியா-மல் அவளுக்குப் பேய் பிடித்து விட்டது என்ற அளவில் தான் ஆண்கள் தங்களது குடும்பப் பெண்களைப் புரிந்து வைத்-திருக்கிறார்கள்.

உடல் பரபரப்பாகும் நேரம் அதுதான். ஹோர்மோன்களின் ஆட்டத்தினால் பாலியல் தேவை அதிகரிக்கும். ஆனால், எத்தனை பேர் வீட்டில் பெண்களின் பாலியல் தேவை இயல்பான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது? “இந்த வயசில இது தேவையா?” என்றும், “மகளுக்கு கல்யாணம் செய்யும் வயசில் உனக்கு இது அசிங்கமா இல்லையா ?” என்றும் அருவருக்கப்படுகிறது. இந்த ‘அடக்கப்பட்ட’ தேவையே அவளின் கத்தல்களுக்கும் கோபங்களு-க்கும் அடிப்படை.

வயதானால் என்ன? பசி, தாகம் போல அதுவும் ஓர் இயற்கையான உணர்வுதான் என்ற புரிதல் ஏன் நமது சமூகத்திற்கு இல்லாமல் போனது? ஆனால், தொண்ணூறு வயதானாலும் ஓர் ஆணின் பாலியல் தேவை இங்கு சகஜமாகப் பார்க்கப்படுகிறது. ஆதிக்கச் சமூகம் தானே இது?

ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஒரு திறமை மறைந்து கிடக்கிறது. அதை அவள் எத்தனையோ முறை வெளிப்படுத்துகிறாள். ஆனால், எத்தனை கணவர்களும் குடும்பத்தினரும் அதைப் பாராட்டு கிறார்கள்? விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் தான் இருக்கிறார்கள். நன்றாகச் சமைக்கும் தி-றமை, அழகாகக் கோலம் போடுவது, அருமையாகக் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் எழுதுவது, வீட்டை நன்கு அலங்கரிப்பது, உடைகளை டிசைன் செய்வது, சிறந்த பேச்சாற்றல், புகைப்படங்கள் எடுப்பது என்று எண்ணிலடங்கா திறமைகள் கண்டுகொள்ளப்படா-மலே போய்விடுகின்றன.

அதை வெளியாள் ஒருவர் கண்டறிந்து பாராட்டும் போது மனம் பூரித்துப் போகிறது. இது தொடரும் போது நாளடைவில் மனம் அவர்கள் பக்கம் சாயத் தொடங்குகிறது. இதனால்தான் குடும்பத்தில் பிரச்சனை ஏற்படத் தொடங்குகிறது.

எல்லார் மனமும் ஒரு சிறிய பாராட்டுக்கும் அங்கீகா ரத்துக்கும் தான் ஏங்கித் தவிக்கிறது. அது கிடைக்கும் இடத்தில் மனம் இயல்பாகச் சாய்ந்து விடுகிறது. இதைத் தவறென்று சொல்பவர்கள் எத்தனை பேர் இன்று மனம் விட்டு ஒரு செயலைப் பாராட்டினீர்கள்?

நாற்பது வயதில் குழந்தைகள் வளர்ந்து வருவார்கள். அப்போது தமக்கு வயதாவதை உள்ளம் உடனே ஏற்றுக் கொள்ளாது. முன் நெற்றியில் நரைமுடிகள் வரும். நெற்றியில் கோடுகள் விழும். கண்ணோரங்க ளில் சுருக்கங்கள் தோன்றும். ஆனால், அவற்றை மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கும்.

மனம் தடுமாறி சலனமுறும் அபாயமும் இந்தப் பருவத்தில் உண்டு. இதற்கு முழுமையான காரணம் வீட்டினரால் கண்டுகொள்ளப்படாமல் போவதும் அலட்சியப்படுத்தப்படுவதும் புறக்கணிக்கப்படுவ தும் தாம். ஆண்கள் தங்கள் மனைதாண்டி பிற பெண்களை நோக்குவது இயல்பாகப் போய்விட்ட இந்தச் சமூகத்தில் பெண் சாதாரணமாக அயலா னிடம் பேசினாலே கற்பு போய்விடும் என்று கதைக்க மட்டும் நன்றாகத் தெரியும்.

தன்னை யாராவது கொண்டாட மாட்டானா என்று பெண் ஏங்கும் வயது இதுதான். தனக்கே தனக் காக, தனது திறமைகளுக்காக ஓர் ஆண் தன்னை உயரத் தூக்கி வைத்துப் பேசமாட்டானா என்று மனம் அலைபாயும். திருமணமான நாளில் இருந்து மட்டம் தட்டிய பேச்சுகளைக் கேட்டவள் தனக்கான புகழுரைகளுக்காக ஏங்குகிறாள். அதைத் தருவது கணவனாக இருக்கும் பட்சத்தில் பிரச்சனைகள் ஏதும் இல்லை. இல்லையெனில் தேவையற்ற பிரச்சனை கள் தான் ஏறபடும்.

பெண் என்பவள் தனக்குச் சேவை செய்வதற்கா கவே படைக்கப்பட்டவள் என்று ‘செவ்வாய் கிரகத்தில்’ இருந்து வந்தவர்களாகத் தங்களை எண்ணிக் கொ-ண்டிருக்கும் ஆண்களின் நினைப்பை மாற்றினால் தான் மாற்றங்கள் நிகழும்.

தன்னையும் குடும்பத்தையும் தாண்டி ஒரு பெண் யோசிக்கக் கூடாதென்பது இவர்கள் எண்ணம். அவளுக்கென்று எந்த நண்பர் வட்டமும் இருக்கக் கூடாதென்ற சுயநல எண்ணமும் இதில் கலந் திருக்கிறது.

அம்மா என்றால் அவள் எந்நேரமும் வீட்டிலேயே இருந்து கொண்டு, சமைத்துத் தள்ளிக் கொண்டு, துணிகளை வெளுத்துக் கொண்டு தான் இருப்பாள் என்ற ஆணாதிக்கச் சிந்தனையைத் தானே குழந் தைகளின் மூளையில் பதித்து வைத்திருக்கிறது இந்தச் சமுதாயம்?

அவளும் நம்மைப் போல இளம் பருவத்தைக் கடந்து வந்தவள்தானே? அவளுக்கும் ஒரு நண்பர் குழாம் இருக்கும்தானே? இந்த மாதிரியான சிந்தனை கள் குழந்தைகள் மனதில் ஏற்படாமல் இருக்க யார் காரணம்? முழுக்க முழுக்க ஆணாதிக்கம் ததும்பும் இந்தச் சமூகம் தான். அதுதான் விக்கிரமாதித்தன் கழுத்தை இறுக்கும் வேதாளம் போல பெண்களின் கழுத்தை இறுக்கிக் கொண்டிருக்கிறது.

இத்தனை வருடங்களுக்குப் பிறகும், தனது நட்புகளைப் பார்க்க ஒரு பெண் தனது கணவரின் அனுமதிக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது. தகவல் சொல்லிவிட்டுப் போய்வரும் நிலை இன்னும் வரவில்லை என்பது எத்தகைய வேதனையான விஷயம். குடும்ப உறவுகளுக்குள் ஆரோக்கியமான உறவு நிலை நிலவவில்லை என்பதுதான் நிஜம். தனக்க-ான தருணங்களை ஒரு பெண் அனுபவிக்க ஏன் மறுக்க வேண்டும்? தனக்கென சில சந்தோஷங்களை அனுபவிக்க யாரும் தடை சொல்லக் கூடாது.

தன் மனைவி சமையலைப் புகழ்வது என்பது நிறைய ஆண்களுக்குக் கைவருவதில்லை. நன்றாக இல்லாத சமையலைக்கூட மனம் புண்படாதபடி சொல்லித்தான் பாருங்களேன். மறுநாளில் இருந்து இன்னும் சுவையான (7ஆம் பக்கம் பார்க்க...)




# பென்டகனில் நிதி முறைகேடு: எலான் மஸ்க்கை விசாரணை அதிகாரியாக நியமித்த அதிபர் டிரம்ப்!

பென்டகனில் ஏற்பட்ட நிதி முறைகேடு காரணமாக எலான் மஸ்க்கை விசாரணை அதிகாரியாக நியமிக்க அமெரிக்க அதிபர் டிரம்ப் முடிவு செய்துள்ளார்.

அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகனுக்கு பட்ஜெட்டில் ஆண்டுதோறும் 1 டிரில்லியன் டொலர்கள் நிதி ஒதுக்கப்படுகிறது. கடந்த ஆண்டு அதிபராக இருந்த ஜோபைடன் 895 பில்லியன் டொலரை ஒதுக்கியிருந்தார்.

இந்தநிலையில் பென்டகனுக்கு நிதி ஒதுக்கீடு செய்ததில் முறைகேடு நடந்திருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்ததையடுத்து அதிபர் டிரம்ப் பென்டகனில் நடந்துள்ள நிதி முறைகேட்டை கண்டறிவதற்காக, சிறப்பு அரசு பிரதிநிதியாக எலான் மஸ்க்கை நியமிக்க முடிவு செய்துள்ளார்.

கல்வித்துறையை ஆய்வு செய்யுமாறு எலான் மஸ்க்கிடம் கூறுவேன். அதன்பிறகு, ராணுவத்தில் ஆய்வு செய்ய சொல்வேன். பென்டகனில் நடந்த பல நூறு மில்லியன் டொலர் முறைகேடுகளை விரைவில் கண்டுபிடிப்போம். இவ்வாறு அவர் கூறினார். இதற்கிடையே எதிர்க்கட்சியினர், அரசின் ரகசியங்களை எலான் மஸ்க்கிடம் ஒப்படைக்கும் முடிவு ஆபத்தானது என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர். பல்வேறு தரப்பினரும் டிரம்பின் இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்

பென்டகனுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள பல்வேறு நிறுவனங்களில், எலான் மஸ்க்கின் நிறுவனங்களும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# 4000 ஊழியர்களை பணி நீக்கம் செய்யும் மெட்டா!




மெட்டா நிறுவனம் கிட்டத்தட்ட நான்காயிரம் ஊழியர்களை பணிநீக்கம் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது அந்நிறுவனத்தின் மொத்த ஊழியர்களில் 5 சதவீதம் ஆகும். இது தொடர்பான ஆவணங்கள் வெளியாகி இருப்பதாகவும், இன்று பணிநீக்கம் தொடர்பான அறிவிப்பு ஊழியர்களுக்கு வழங்கப்பட இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு சார்ந்த முதலீடுகளை சீர்படுத்தவும், எதிர்பார்த்த அளவுக்கு பணியாற்றாத ஊழியர்களை பணிநீக்கம் செய்வதென மெட்டா நிறுவனம் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த நடவடிக்கை மூலம் இந்த ஆண்டுக்கான நிதிநிலையை திட்டமிடவும் அந்நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து வெளியான அறிக்கையில், மெட்டா நிறுவன தலைமை செயல் அதிகாரி மார்க் ஜுக்கர்பர்க் கடந்த ஜனவரி மாதத்தில் ஊழியர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் சரியாக பணியாற்றாதவர்களை உடனடி பணிநீக்கம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறியிருந்தார்.

கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களான மைக்ரோசாப்ட், அமேசான், சேல்ஸ்ஃபோர்ஸ் உள்ளிட்டவை ஆயிரக்கணக்கான ஊழியர்களை தொடர்ச்சியாக பணிநீக்கம் செய்து வருகின்றன. அந்த வரிசையில் மெட்டா நிறுவனத்தின் முடிவால் ஊழியர்கள் கலக்கத்தில் உள்ளனர்.



# தன்னை பற்றிய போலி வீடியோக்களை பகிர்ந்த அதிபர் மேக்ரான்!

பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி போலி காணொளிகளை உருவாக்கி வருகிறார்.

மேலும் அவற்றை சமூக வலைதளங்களில் பகிர்ந்து வருகிறார். அவ்வாறு அவர் உருவாக்கிய காணொளி ஒன்றில் 1980-க்களில் பிரபலமாக "வோயேஜ் வோயேஜ்" பாடலுக்கு அவரே நடனமாடும் காட்சி இடம்பெற்றுள்ளது.

இந்த காணொளியை உருவாக்கியவர்களை பாராட்டிய மேக்ரான் "வீடியோக்கள் அருமையாக உருவாக்கப்பட்டு இருக்கின்றன. இவை மிக அழகாக உள்ளன. இவை என்னை சிரிக்க செய்தன," என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸ் நாட்டில் நடைபெறும் ஏ.ஐ. உச்சிமாநாட்டை ஊக்குவிக்கும் வகையில், மேக்ரான் இந்த வீடியோக்களை உருவாக்கி இருக்கிறார்.

இந்த மாநாட்டில் இந்திய பிரதமர் மோடி உள்பட பல்வேறு உலக தலைவர்கள் கலந்து கொள்கின்றனர். இந்த மாநாட்டிற்கு இந்தியாவும் இணைந்து தலைமை தாங்குகிறது.

இது தொடர்பாக அதிபர் மேக்ரானின் இன்ஸ்டாகிராம் பதிவு அதிக பார்வையாளர்களை பெற்றதோடு, அதிகளவு பகிரப்பட்டும் வருகிறது. எனினும், சிலர் அதிபர் மேக்ரானின் சமூக வலைதள கணக்கு ஹேக் செய்யப்பட்டு இருக்கலாம் என்று நினைத்தனர்.

# காசாவின் முக்கிய பகுதியில் இருந்து பின்வாங்கிய இஸ்ரேல் படைகள்!



காசாவின் முக்கிய பகுதியில் இருந்து இஸ்ரேல் படைகள் பின்வாங்கியுள்ளது என இஸ்ரேல் இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் காசாவின் ஹமாஸ் அமைப்பு இடையிலான போர் 15 மாதத்துக்குப் பிறகு முடிவுக்கு வந்துள்ளது. கடந்த 2023-ம் ஆண்டு இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி 250-க்கும் மேற்பட்டோரை பிணைக்கைதிகளாகப் பிடித்துச்சென்றனர்.

அதன்பின், தற்காலிக போர் நிறுத்தத்தின் போது 120-க்கும் மேற்பட்ட பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஹமாஸ் அமைப்பினரிடம் இன்னும் 94 பிணைக்கைதிகள் உள்ளனர். 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஹமாஸ் போராளிகள் பிணைக்கைதிகளை விடுவித்து வருகின்றனர். இஸ்ரேல் ராணுவமும் தங்கள் சிறைகளில் உள்ள பாலஸ்தீனர்களை விடுவித்து வருகிறது.

இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியபோது வடக்கு காசாவில் இருந்த பாலஸ்தீனர்கள் தெற்கு காசாவிற்கு இடம்பெயர்ந்தனர். அவர்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு இஸ்ரேல் இராணுவம் அனுமதித்தது. அதன்படி ஏராளமான பாலஸ்தீனர்கள் வடக்கு காசாவுக்கு திரும்பி வருகின்றனர்.

இந்நிலையில், வடக்கு காசாவையும் தெற்கு காசாவையும் இணைக்கும் நெட்சரிம் பகுதியில் இருந்து படைகள் வாபஸ் பெறப்பட்டது என இஸ்ரேல் இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

## தையிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் இன்று இடம்பெற்றது. அதன பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

"யாழ். தையிட்டி விகாரைக்கு எதிராக இடம்பெறும் போராட்டத்துக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி முழுமையான ஆதரவைத் தெரிவிக்கும். அது உண்மையில் உடைக்கப்பட வேண்டிய விடயம்.

வடக்கு, கிழக்கில் பிக்குகள் மற்றும் சில திணைக்களங்கள் நினைத்ததைச் செய்யும் ஒரு நிலை காணப்படுகின்றது. எனவே, இந்த விகாரை உடைக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்கான ஆதரவை நாங்கள் வழங்குவோம். மக்களுடைய விருப்பமும் அதுவே." - என்றார்.

## தையிட்டி திஸ்ஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள திஸ்ஸ ராஜமகா விகாரை சிங்கள - பௌத்தர்களுக்குச் சொந்தமானது. இந்த விகாரை அமைந்துள்ள காணியும் தற்போது விகாரை நிர்வாகத்துக்கே உரித்தானது.

எனவே, இந்த விவகாரம் தொடர்பில் கதைப்பதற்குத் தமிழ் மக்களுக்கும், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் எந்த அருகதையும் கிடையாது.

தையிட்டி திஸ்ஸ ராஜமகா விகாரையை இடிக்க வேண்டும் என்று கூச்சலிடும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இந்த விடயங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த விகாரையில் தமிழர்கள் எவரும் கைவைக்க இடமளிக்கமாட்டோம். இந்த விகாரைக்கு எதிராகப் பௌர்ணமி தினத்தன்று தமிழர்கள் போராட்டம் நடத்தி எம்மை மிரட்ட முடியாது." - என்றார்.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமுல்படுத்தப்படவுள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, A,B,C,D ஆகிய வலயங்களில் பிற்பகல் 3.30 முதல் 4 மணிக்குள் மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு 5 மணி முதல் 5.30 வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும்.

E,F,G,H,U,V ஆகிய வலயங்களில் பிற்பகல் 5 மணி முதல் 5.30க்குள் மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு மாலை 6.30 முதல் 7 மணி வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

I,J,K,L,P,Q ஆகிய வலயங்களில் மாலை 6.30 முதல் 7 மணி வரை மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு இரவு 8 மணி முதல் 8.30 வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும்.

R,S,T,W ஆகிய வலயங்களில் இரவு 8 மணி முதல் 8.30 வரை மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு இரவு 9.30 முதல் 10 மணி வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

## பஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் ஒன்று அதிவேகமாக இயக்கப்பட்டதன் காரணத்தினாலே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் மூத்த பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக மனதுங்க தெரிவித்தார்.

கதுறுவெலவில் இருந்து குருணாகல் நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று தோரயாய பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வேளையில், மாதுறுஓயாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று குறித்த பஸ்ஸின் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 28 பேர் குருணாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குருணாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியில் அல்லது அடுத்த வருடம் முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும்." - என்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். "மக்களுக்கான எமது நேர்வழி அரசியல் பயணத்தின்போது எதற்கும் அஞ்சி, அடிபணியப்போவதில்லை. போற்றுவோர் போற்றட்டும், தூற்றுவோர் தூற்றட்டும். ஏனெனில் மக்கள் சக்தி எமது பக்கம்" - என்றும் அவர் கூறினார்.

சீனா மற்றும் இலங்கை நாட்டின் நட்புறவின் பயனாக "சீனாவின் சகோதர பாசம்" எனும் வாசகத்துடன் யாழ். மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குச் சீனா நாட்டின் உதவியில் உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு இன்று யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலாளர் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்துகொண்டதோடு, சிறப்பு அதிதியாக இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பிரதி பொறுப்பதிகாரி ஜ/ யான்வேய், அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் கலந்துகொண்டு யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 1070 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் அதிகாரிகள், ஏனைய உத்தியோகத்தர்கள், சீனத்தூதரகத்தின் ஏனைய அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

"சீனாவின் சகோதரப் பாசம் தொடர வேண்டும். தேசிய மக்கள் சக்தி ஆட்சி பீடம் வந்து 80 நாட்களுக்கு மேல் ஆகின்றது. இக்காலப்பகுதிக்குள் நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்துக்கான அடித்தளம் இடப்பட்டு வருகின்றது. இதற்குரிய ஆணையை வழங்கிய மக்களுக்கு எமது நன்றிகள்.

யாழ். மக்களும் தேசிய மக்கள் சக்தியை முதன்மைக் கட்சியாக தெரிவுசெய்துள்ளனர். அதற்காக மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வறுமை ஒழித்தல், டிஜிட்டல் மயமாக்கல் உட்பட ஒட்டுமொத்த நாட்டையும் மேம்படுத்தவதற்கான திட்டமே தூய்மை ஸ்ரீலங்கா திட்டமாகும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வரும் மாகாண சபை முறைமை நீண்டு நிலைக்கக்கூடிய நிரந்தர தீர்வு என நாம் நம்பவில்லை. எனினும், மாகாணசபை முறைமையை தமக்கு கிடைத்த உரிமையாக தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

எனவேதான் மாகாண சபை முறைமை மீது கைவைக்காதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண சபை முறைமையை அர்த்தமுள்ள முறைமையாக மாற்றியமைப்போம். இந்த வருடத்துக்குள் அல்லது அடுத்த வருடம் முற்பகுதியில் அதற்கான தேர்தல் நடத்தப்படும். சிறுபான்மையின மக்கள் உட்பட நாட்டு மக்களின் உரிமைகளை நிலைநாட்டுகின்ற புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும்." - என்றார்.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஆயினும் புத்தாண்டின் பின்னர் ஏப்ரல் மாத இறுதிக்குள் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் தற்போது அரசு அவதானம் செலுத்தியுள்ளது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குக் கிடைத்து, அதைக் கடந்த வாரம் நாடாளுமன்றுக்கு சபாநாயகர் அறிவித்திருந்தால் கடந்த 6ஆம் திகதி அது தொடர்பில் விவாதம் நடத்துவது என்று திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக் கிடைக்கவில்லை என்று சபாநாயகர் கடந்த 5ஆம் திகதி அறிவித்திருந்தார்.

இதனால் தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியங்கள் இல்லாது போயுள்ளன என்று தெரியவருகின்றது. ஆயினும், அடுத்த நாடாளுமன்ற அமர்வில் சபாநாயகர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குக் கிடைக்கும் பட்சத்தில் ஏப்ரல் மாத இறுதிக்குள் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்றும் அறியமுடிகின்றது.

# பலத்த காயங்களுடன் சிறுத்தையின் சடலம் மீட்பு



கொழும்பு , பெப். 10

ஹட்டன், மேஃபீல்ட் தோட்டத்தில் தலையில் பலத்த காயங்களுடன் சிறுத்தையின் சடலம் ஒன்றை வனவிலங்கு அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

நல்லதண்ணிய வனவிலங்கு அலுவலக அதிகாரிகளின் கூற்றுப்படி, மூன்று வயதுடைய சிறுத்தைப்புலி, வாகனம் மோதியதாலோ அல்லது தாக்குதலினாலோ காயங்களுக்கு ஆளாகியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. திம்புல பத்தனை பொலிஸார் மூலமாக கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து, தேயிலைத் தோட்டத்தில் சடலம் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், ஹட்டன் நீதவானின் உத்தரவின் பேரில், இறப்புக்கான சரியான காரணத்தைக் கண்டறிய சிறுத்தையின் சடலம் பிரேத பரிசோதனைக்காக ரந்தெனிகல வனவிலங்கு கால்நடை வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ஐ)

# நாற்பதுகளை.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உணவு கிடைக்கும். ஆண்கள் தங்கள் கிரீடத்தைக் கழற்றி வைத்து விட்டு ஒருநாள் மனைவிக்குச் சமைத்துத் தந்தால் ஒன்றும் குறைந்துவிட மாட்டார்கள். அவரவர் பணிகளைப் பொறுத்து வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்வது ஒன்றும் தவறில்லை.

சலனங்களை அடக்கும் பக்குவங்கள் எல்லோருக்கும் ஏற்படுவது இல்லை. சறுக்கலோடு தப்புபவர்கள் வெகு சிலரே. ஆழத்தில் விழுந்து எழ முடியாமல் தவிப்பவர்கள் தான் இங்கு அதிகம். இந்த நாற்பது ப்ளஸ் வயதில் சலனங்கள் வருவது இருபாலருக்கும் சகஜம் தான். ஆனால், அதைத் தாண்டி வருவது என்பதுதான் நிஜமான சவால். உடல்ரீதியாகப் பெண்களுக்கு நிறைய சிரமங்கள் வரும் வயதும் இதுதான். அதை முதலில் கணவன் புரிந்துகொள்ள வேண்டும். அதை விடுத்து தனக்கு மனைவி 'கம்பெனி' கொடுப்பதில்லை என்று வெளியே போய் சாப்பிட அலையக் கூடாது. அதேபோல் மனைவியும் நினைக்கத் தொடங்கினால், அப்பப்பா- அப்புறம் ஆண்கள் தான் ஆடிப்போக வேண்டும். மனைவியின் உடல்ரீதியான, மன ரீதியான உணர்வுகளை ஆண்கள் புரிந்து கொள்ளவாவது முயற்சிக்க வேண்டும். நாற்பது வயதுகளில் உடல் எடை கூடும். கலங்காது உடல்நலனுக்குத் தகுந்தவாறு உடற்பயிற்சிகளைச் செய்யலாம். நரை முடியை 'டை'யிட்டு மறைக்காது கம்பீரமாக மாற்றிக் கொள்ளலாம். (அந்த 'டை'யினால் வரும் கண்பார்வை கோளாறுகளைத் தவிர்க்கவே இந்தக் கருத்து.) நாம் அழகு என்று ஒரு நாளுக்குப் பத்து முறையாவது தன்னம்பிக்கையோடு வாய்விட்டுச் சொல்ல வேண்டும். நாம் நம்மை முதலில் அழகு என்று நம்ப வேண்டும். அப்புறம் பாருங்கள் 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'. எதையும் நேருக்கு நேர் பேச முயற்சி செய்ய வேண்டும். நேர்மை நம்மை இன்னும் கம்பீரமாகக் காட்டும். நமக்குப் பிடித்த ஆடைகளை நாம் அணிந்து கொள்ள வேண்டும். அதற்கு யாருடைய அனுமதியையும் கேட்கக் கூடாது. நேராக நிமிர்ந்து நடக்க வேண்டும். யாரையும் கண் பார்த்துப் பேச வேண்டும். நம் உடலுக்குத்தான் வயதாகிறதே தவிர, நம்முடைய எண்ணங்கள் என்றும் இளமையாக இருக்க வேண்டும். நாற்பது என்பது சிறகுகள் முளைக்கத் தொடங்கும் இல்லையில்லை மடங்கிக் கிடக்கும் சிறகுகள் விரியத் துடிக்கும் பருவம். அந்த அழகிய அந்திப் பருவத்தை இனிமையாகக் கொண்டு செல்வது தன்னுடன் இருப்பவர்களின் ஆதரவையும் அனுசரணையையும் பொறுத்துதான் அமையும்.

ஒரு நாளின் அந்திப் பொழுது எப்போதுமே அழகாக இருக்கும். பகல் பொழுதின் வெம்மை தணிந்து, இரவின் குளுமை ஆரம்பமாகும் ரம்மியமான நேரம் அது. அந்த நாளின் களைப்பையெல்லாம் மறக்கடித்து விட்டு, இரவின் ஏகாந்தத்தை அனுபவிக்க ஏதுவாகக் கட்டியம் கூறும். அதைப்போல இந்த நாற்பது ப்ளஸ் வயதை முதலில் ஏற்றுக் கொண்டு, அதை ரசனையோடு அனுபவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பகிரப்படாத தருணங்களைச் சூடான தேநீர்க் கோப்பையுடன், நமக்குப் பிடித்தமான நட்புடனோ, உறவுடனோ மனம் விட்டுப் பகிர்ந்து கொள்ள வேண்டும். பிடித்த இசையை அனுபவிக்கலாம். படிக்காத புத்தகங்களை வாசிக்கலாம். மனதை விசாலமாக்கிக் கொள்ள வேண்டும். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பாவிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். நமது எஞ்சிய முதுமைக் காலத்தை அது இதமாகக் கழிக்க உதவும். முதுமையை வரமாக்குவதும் சாபமாக்குவதும் நம் கையில் தான் உள்ளது. நாற்பது வயதை இனிமையாக்குவதும், நாராசமாக்குவதும் நமது எதிர்கொள்ளும் திறனையும், அணுகுமுறையையும் பொறுத்தே அமையும். வாருங்கள் தோழிகளே.. நாற்பதுகளை நலமாகக் கடக்கலாம்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.02.2025 இல் வெளியிடப்பெற்றது.